9—

மருத்துவமனை

***4433—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, வடபாதிமங்கலம் கிராமத்தில் அரசு மருத்துவமனை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடபாதிமங்கலம் கிராமம் 2,000 மக்கள்தொகை கொண்ட சிறிய கிராமமாகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று உள்ளது. இக்கிராமம் சாத்தனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய எல்லைக்குட்பட்டது. இக்கிராமத்திற்கு மிக அருகில், 5 கிலோ மீட்டர் தொலைவில் சாத்தனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ளது. மேலும் 10 கிலோ மீட்டர் தொலைவில் கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு 3 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். மேலும் இக்கிராமத்திற்கு அருகிலுள்ள உள்ளிக்கோட்டை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமானது சென்ற நிதியாண்டில் 30 படுக்கை வசதி கொண்டதாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மிக அருகில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஒரு வட்டம்சாரா மருத்துவமனை அமையப் பெற்றிருப்பதாலும் தற்போது வடபாதிமங்கலம் கிராமத்தில் அரசு மருத்துவமனை அமைப்பதற்கு நிருவாகரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, வடபாதிமங்கலத்தினைச் சுற்றியிருக்கிற கிராமங்கள் புள்ளமங்கலம், மணக்கரை, சித்திரையூர்,

2007 அக்டோபர் 18]

பாரதிமூலங்குடி, பூந்தாலங்குடி, கீழமணலி, சித்தனக்குடி, வேலுக்குடி, குலமாணிக்கம், திருநெல்லிக்காவல், செருவாமணி, சேந்தங்குடி, மாவட்டக்குடி, ஓச்சேரி போன்ற ஊராட்சிகளில், அதை உள்ளடக்கிய 100 கிராமங்கள் இருக்கின்றன. இதைச் சுற்றி மருத்துவ வசதி என்பதே இல்லாத சூழ்நிலை அந்தப் பகுதியிலே தொடர்ந்து நிலவுகிறது. அருகிலே ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த இடத்திற்குச் சென்று வருவதற்கான வாய்ப்புகள் இல்லாத பகுதிகள் இவை.

முற்பகல் 10–35

அதைப்போலவே, அருகிலே கூத்தாநல்லூர் மருத்துவமனை உள்ளது என்று சொன்னார்கள். அதற்கும் போக்குவரத்து வசதிக்குரிய வாய்ப்புகள் இல்லை. கிட்டத்தட்ட 20, 25 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய அவசியத்திலே பல கிராம மக்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற காரணத்தினாலேதான் அந்தப் பகுதியை மையப்படுத்தி ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்பட வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி திரும்பவும் பரிசீலித்து, ஒரு சிறப்பு நேர்வாக எடுத்து அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 174 புதிய P.H.C. வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு நாங்கள் கோரிக்கை விட்டிருக்கிறோம். அங்கே பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. விரைவிலே அதற்குரிய அனுமதி வருகிற நேரத்தில், இதை ஒரு தனி நேர்வாகக் கருதி நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதைப்போலவே, எனது தொகுதிக்குட்பட்ட உள்ளிக்கோட்டை, திருமக்கோட்டை பகுதிகளிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதை இங்கே

குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

சாலைப் பராமரிப்பு

***383—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளைப் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், திருப்பூர் தொகுதியில் சுமார் 83 கோடி ரூபாய் திருப்பூர் தொகுதிக்குட்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டு அந்தப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராக நான் இந்த முறை தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இந்தக் கேள்வியை எழுப்பினேன். அன்றைக்கு அந்தப் பாதைகள் எல்லாம் மிக மோசமான நிலையில் பழுதடைந்திருந்த நிலையில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்று, முதல் வரவு–செலவுத் திட்டத்திலேயே திருப்பூருடைய ரோடுகளைப் பராமரிக்கவும், பாலங்கள் கட்டுவதற்காகவும் 70 கோடி ரூபாய் நிதி அன்றைக்கு முதல் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டு, அநேகமாக